# கிராமிய தமிழிசை வழிபாடு

நாள் : **11.01.2026 ஞாயிற்றுக்கிழமை**

நேரம் : **காலை 8.30**

இடம் :

**CSI கிறிஸ்து நாதர் ஆலயம்**

சபையார் அனைவரும் ஆலயத்தில் நடைபெறும்
வழிபாடு மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளில்
கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

**ஆயர்**

மற்றும்

**பெண்கள் ஐக்கிய சங்கம்**





தென்னிந்தியத் திருச்சபை – சென்னைப் பேராயம் – படப்பை குருசேகரம்

**CSI கிறிஸ்து நாதர் ஆலயம்**, டேவிட் நகர், படப்பை – 601 301.

# விழுதுகள்


**ஜனவரி - 2026**

(உறுப்பினர் பயன்பாட்டிற்கு மட்டும்)

## வாக்குத்தத்தம் – 2026

**"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான
காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி,
உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்;
நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும்
வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்."**

**ஏசாயா 58:11**



## ஆயர் மடல்

"ஆண்டு முழுவதும் உமது நலத்தால் முடிசூட்டுகிறீர்." திருப்பாடல்கள் 65.11

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான திருச்சபையார் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துதலை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கர்த்தர் நம் வாழ்வில் மற்றொரு புதிய ஆண்டை காண கிருபை செய்திருக்கிறார். கிறிஸ்தவ ஆன்மீக வாழ்க்கை ஓர் தொடர் பயணம். இதில் நாம் எப்போதும் முன்னோக்கி பயணிக்க அழைக்கப்படுகிறோம். கடந்த கால தோல்விகள், நினைவுகள், பின்னடைவுகள் மறந்து இறை நம்பிக்கை என்னும் கேடயத்தை பிடித்தவர்களாக புதிய ஆண்டை எதிர்கொள்வோம். பொதுவாக மனித மனங்கள் நம் விருப்பங்களுக்கும், ஏக்கங்களுக்கும் ஏற்ப கடவுள் செயல்பட வேண்டும் என விரும்பும், ஆனால் இறை நம்பிக்கை என்பது கடவுளின் திருவுளம் நம் வாழ்வில் நிறைவேற நம்மை கடவுளின் கரங்களில் அர்ப்பணிப்பதேயாகும்.

புதிய ஆண்டு நம்மை புதியவற்றுக்கு வழி நடத்துகிறது. நம் வாழ்வில் முயற்சி எடுக்காமல் எதுவும் நமக்கு கிடைப்பதில்லை ஒவ்வொரு செங்கல்லாக வைத்து ஒரு கட்டிடத்தை கட்டுவது போல முயற்சிகள் பல எடுத்து நாம் இலக்கை எட்ட இந்த புதிய ஆண்டு நம்மை வரவேற்கிறது. அதற்கு இறை நம்பிக்கையில் (தன்னம்பிக்கையில்) இன்னும் ஆழமாய் வளர்ந்து நம்மை கடவுளின் கரங்களில் ஒப்புக் கொடுப்போம். உயர்ந்த எண்ணங்களுடன் உன்னத இலட்சியத்துடன் உயர்வை எட்டிப் பிடிப்போம். எப்போதும் அகமகிழ்ந்து நம்மை வாழ்த்துகின்ற வழிநடத்துகின்ற ஆண்டவரின் ஆசிக்கும், அருளுக்கும் நன்றியுடன் கடவுளின் கரத்தில் நம்மை ஒப்புவிப்போம்.



**11.01.2026 கிராமிய தமிழிசை வழிபாடு**

நமது ஆலயத்தில் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பாக கிராமிய தமிழிசை வழிபாடு நடைபெறும். திருச்சபையார் நமது பாரம்பரிய உடையில் வழிபாட்டில் பங்கேற்று இறையாசி பெறவும் சிறப்பு நிகழ்வுகள் போட்டிகளில் பங்கேற்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**26.01.2026 குடியரசு தின விழா**

நமது ஆலயத்தில் இந்திய நாட்டில் 76–வது குடியரசு தின விழாவை முன்னிட்டு 26.01.2026 அன்று காலை 8.00 மணிக்கு திருச்சபை வளாகத்தில் குடியரசு தின கொடியேற்றம் நடைபெறும். இறைமக்கள் இச்சிறப்பு நிகழ்வில் பங்குபெற்று நமது நாட்டிற்காக, தலைவர்களுக்காக, எதிர்காலத்திற்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

கடந்த கிறிஸ்துமஸ், புத்தாண்டு நிகழ்வுகளில் உங்கள் சிறப்பான பங்களிப்புக்காக ஜெபத்திற்காக நன்றி தெரிவிக்கிறேன். திருச்சபை குடும்பமாக ஆண்டவர் அருளும் ஆசீர்வாதமும், சமாதானம், வழிநடத்துலும் இப்புதிய ஆண்டில் உங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் நிலைத்திருக்க ஆயர் குடும்பமாக வாழ்த்துகிறேன்.

ஆண்டவர் தொடர்ந்து உங்களை வழிநடத்துவாராக, இம்மாதம் பிறந்தநாள் மற்றும் திருமண நாள் காணும் ஒவ்வொருவருக்கும் வாழ்த்துதலை தெரிவித்துக்கொள்கிறேன்.

இறைபணியில் அன்புடன்,
அருள்பணி **Y. தேவகுமார்**
98401 98476



**பெண்கள் பகுதி**

## பேதுருவின் மாமி

**லூக்கா 4:38**

அன்பான திருச்சபை மகளிர் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாத பெண்கள் பகுதியில் நாம் பேதுருவின் மாமியை குறித்ததான நற்குணங்களைத் தியானிக்க உள்ளோம்.

இயேசுவின் சீஷனாகிய சீமோன் பேதுருவின் குடும்பத்தைக் குறித்து நாம் திருமறையில் அதிகம் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இயேசுவானவர் பேதுருவின் வீட்டிற்கு சென்ற போது, அங்கு பேதுருவின் மாமி ஜுரமாக இருந்ததை இப்பகுதி நமக்குத் தெரிவிக்கிறது. இதனால் பேதுரு திருமணமானவர் என்பதும் அவருடைய மனைவியின் தாயார் அவர்களோடு இருந்து, அன்புள்ளத்தோடு எல்லாரையும் உபசரித்தவளாய் தன் மகளும் மருமகனும் கடவுளின் திருப்பணியில் பேருதவியாக இருந்தவள் என்பது புலப்படுகிறது.

லூக்கா நற்செய்தியாளர் மருத்துவர் அவருடைய நூலில் சீமோனின் மாமியார் கடுங்காய்ச்சலால் துன்புற்ற நிலையில் இருந்தார் என குறிப்பிடுகிறார். பேதுருவின் மாமிக்கு ஜுரம் என்றதும் லூக். 4:38ல் அவளுக்காக இயேவிடம் வேண்டிக்கொண்டார்கள் என்று எழுதப்பட்டுள்ளதை நாம் வாசிக்கும் போது அப்பெண் அநேகரை உபசரிப்பவளாகவும் அநேகருக்கு உதவி செய்பவளாகவும், அநேகரின் அன்புக்கு பாத்திரவாளியாய் இருந்திருந்ததையும் நாம் அறிய முடிகிறது. அதனால் தான் அவ்வம்மையாருக்கு காய்ச்சல் என்றதும் இயேசுவானவர் சுகப்படுத்த பேதுருவின் வீட்டிற்கு உரிமையோடு தன் சீஷர்களோடு தங்கச் செல்வது அவ்வீட்டிலுள்ள இரு பெண்களின் அன்பினையும் உபசரிப்பையும் நமக்கு புலப்படுத்துகிறது.

இயேசு பேதுருவின் மாமியைக் கண்டு தன் கரத்தை நீட்டித் தொட்டுத் தூக்கிவிட்டார் என மாற்கு 1.13ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வற்புதத்தைப் பெறத் தகுதியுள்ளவளாகக் காணப்பட்டாள். அவர் அப்படுக்கையினின்று அவ்வம்மையாரைத் தூக்கிவிட்ட பின், திரும்பவும் அவள் படுக்கையில் காணப்படவில்லை. மாறாக அவ்விடத்தைவிட்டு உடனே எழுந்து, அச்சூழலை உதறிவிட்டு பணிவிடை செய்வதை வாசிக்கிறோம்.



ஆம், சகோதரிகளே, நாமும் அநேக வேளைகளில் வேண்டாத காரியங்களில் சிக்குண்டு இழுக்கப்பட்டு, சோர்ந்து காணப்படுகிறோம். இதை அறிந்த நம் நண்பர்களோ, நம் வீட்டாரோ இயேசுவை நமக்கு ஞாபகப்படுத்தும்போது, அவர் நம்மை மன்னித்து நம்மிடம் வந்து பேசியோ, அரவணைத்தோ, தேற்றியோ நம்மை ஏற்றுக்கொண்ட பின் அச்சூழலை உதறிவிட்டு அப்பிரச்சனையினின்று அப்பழக்கத்தினின்று அவ்வேண்டாத காரியத்தினின்று நம்மைப் பிரித்துக் கொண்டு அதை விட்டு வெளியேறி கடவுளுக்கு, பிரியமான காரியங்களில் நம் நேரத்தையும், தாலந்தையும், செலவிட எத்தனிப்பதே நம் கஷ்டம் நீங்கி நாம் பணிவிடை செய்வதின் அர்த்தமாகும்.

மாற்கு 1:31ல் உடனே காய்ச்சல் அவளை விட்டு நீங்கிற்று அப்போது அவர் அவர்களுக்குப் பணிவிடை செய்தாள் என எழுதப்பட்டுள்ளது. அநேக வேளைகளில் கொஞ்சம் கொஞ்சமாக எழும்புகிறேன், கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிடுகிறேன், கொஞ்சம் கொஞ்சமாக செயல்படுகிறேன் என்றெல்லாம் சாக்குப்போக்கு சொல்லும் பெண்களாக நாம் காணப்படுகிறோம். எப்படி காய்ச்சலில் இருந்த பேதுருவின் மாமியினால் உடனே பணிவிடை செய்ய முடிந்தது? சிந்திப்போம்.

இயேசுவின் மேலும் அவரின் ஊழியத்தின் மேலும் அவளுக்கிருந்த அபாரமான அன்பும், இயேசு அவளுக்கு அளித்த பூரண விடுதலையுமே அப்பெண்ணை உடனே செயல்பட வைத்தது. நம்மையும் நம் கடவுள் முழுமையாகவும், அர்ப்பணிப்புடனும் அன்புடனும் அவருக்காய் உடனே பணிவிடை செய்யவே நம்மை அழைக்கின்றார்.

வாருங்கள், சகோதரிகளே, கடவுள் நமக்கு ஈவாக தந்த இப்புத்தாண்டில் வேண்டாத காரியங்களை உதறிவிட்டு தம் கடவுள் கரத்தை இறுகப் பற்றிக்கொண்டு, துரிதமாய் செயல்படுவோம். கடவுளின் அன்புக்கும் அரவணைப்பிற்கும் பாத்திரமாய் மாறி வெற்றி வாழ்க்கை வாழ்வோம்.

கடவுள் தாமே நம்மை ஆசிர்வதித்து, அரவணைத்து வழிநடத்துவாராக. ஆமென்.

இறை பணியில்

**திருமதி. ஜாய்சிலின் தேவகுமார்**

ஆயரம்மா

## 2026 – ஜனவரி மாத வழிபாடு ஒழுங்குகள்

| நாள்/கிழமை | திருமறைப்பாடம் | இறைச்செய்தித் தலைப்பு | நடத்துனர்/செய்தியாளர் |
|---|---|---|---|
| 01-01-2026<br>வியாழன்<br>காலை 9.00 | புத்தாண்டு உடன்படிக்கை<br>திருவிருந்து வழிபாடு | | ஆயர் |
| 04-01-2026<br>ஞாயிறு<br>காலை 8:30<br>திருவிருந்து<br>வழிபாடு | ஏசாயா 45:18-25<br>திருத்தூதர் பணிகள்<br>19 : 1-7<br>தி.பா. 24<br>மத்தேயு<br>2: 1-12 | மாட்சியின்<br>திருக்காட்சி<br>வெளிப்படுதலுக்கு<br>மறுமொழி | ஆயர் |
| 11-01-2026<br>ஞாயிறு<br>காலை 8:30 | சிறப்பு கிராமிய<br>தமிழிசை வழிபாடு | | ஆயர் /<br>பெண்கள்<br>ஐக்கிய சங்கம் |
| 18-01-2026<br>ஞாயிறு<br>காலை 8:30<br>திருவிருந்து<br>வழிபாடு | தானியேல் 1:8-21<br>கொலோ. 3: 1-11<br>தி.பா. 1<br>மாற்கு 5: 1-21 | கட்டவிழ்த்தல் :<br>தீயப்<br>பழக்கங்களிலிருந்து<br>விடுதலை | ஆயர் |
| 25-01-2026<br>ஞாயிறு<br>காலை 8:30 | நெகேமியா 2:11-18<br>திருத்தூதர் பணிகள்<br>4: 32-37<br>தி.பா. 67<br>மாற்கு 6: 32-44 | குடியரசு :<br>தகைமையும்<br>ஒருமைப்பாடும் | திரு. J. நோபுள்<br>சாலமோன் |
| 26-01-2026<br>திங்கள்<br>காலை 8:00 | 76-வது குடியரசு தின<br>கொடியேற்றம் சிறப்பு வழிபாடு | | |

## ஜனவரி – 2026 : தங்கள் பிறந்த நாள் காணுவோர்

"கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் பாடுவேன்." சங்கீதம் 13:6

01. செல்வி. கிறிஸ் ஏஞ்சலின்
திருமதி. ரோஸ்மேரி
திரு.ஹேரி டேனியல்
02. செல்வன். அமரியா மேஷாக்
04. திரு. விவேக்குமார் சில்வெஸ்டார்
05. திரு. ஷெல்டன் சாலமோன்
06. திரு. ரூஃபஸ் அலெக்ஸ்
திரு. பிரபாகரன்
07. செல்வன். ஜீவான் சார்லஸ் ரிச்சர்ட்சன்
செல்வி. ஜெமிமா சாரா சத்தியவதி
செல்வன். ஜெசி டேனியல் ஆண்டர்சன்
08. செல்வி. இன்சி பிரைஸ்
10. திருமதி. மெர்சி லலிதா
திரு. ஆர்தர் பவன் கீர்த்தன்
11. திரு. ரியன் பால்
12. திருமதி. ரெபேக்கா ரேணுகா
திருமதி. கல்யாணி
திருமதி. அபிகாயில் மனோரஞ்சிதம்
13. திருமதி. ஹெலன் அருள் சகாயம்
திரு. ஜேசுதாசன்
செல்வி. லிடியா
14. திரு. ஹார்லி கிரகாம்
திருமதி. சாரா
திரு. ஜீவா வசந்த்
15. திருமதி. வஸ்தி
செல்வன். ஜெபஸ் ஜோஸ்வா டேனியல்
செல்வி. ஜென்சி
திரு. பிரதாப் சிங்
திருமதி. நியூஜிலின் ஃப்ளாரன்ஸ்
திருமதி. ஃப்ரீடா அனுசியா
16. திரு. ஆனந்த்
திரு. சாம் மோசஸ்
17. செல்வி. சாரா ஜேக்குலின்
செல்வி. அமண்டா கேட்லின்
திரு. டால்டன் எடி
18. திருமதி. பரிமளா காந்தி
திருமதி. கண்மணி
செல்வன். லின்தேவசந்திரன்
19. திரு. மனுவேல்ஃப்ராங்கிளின்
20. திரு. ராஜதுரை
செல்வன். ஆடன் ரத்தன்
திரு. ஐசக் ராஜதுரை
21. திருமதி. ஜேனட் ராஜ்
திரு. சாய் சங்கர்
செல்வன். ஆடன் அம்ப்ரோஸ்
23. திருமதி. ஜீவகனி இம்மானுவேல்
திருமதி. கிளாடிஸ் ஜவர்தாஸ்
செல்வன். சுஜித் சிரில்
24. திரு. டால்ஃபி
25. திரு. ஆஸ்டின் ஜாப்
திரு. நெல்சன் மண்டேலா
செல்வன். ரோகன்
திரு. இளங்கோ மைக்கேல் பாஸ்கர்
26. டாக்டர். மோனிகா
திருமதி. ஜெயந்தி
27. செல்வி. அனிதா பிரைஸ்
28. திரு. பேரின்பராஜன்
திருமதி. ஜென்சி
29. திருமதி. Dr நிர்மலா
30. செல்வன். ஜார்ஜ் தேவாசீர்வாதம்
செல்வன். சைலஸ் க்ளமண்ட்
31. செல்வன். கேப்ரியல் ஜான்
செல்வன். காலேப் ஆரோன்.

## ஜனவரி – 2026 : தங்கள் திருமண நாள் காணுவோர் :

"நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும்
உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்." ஏசாயா 2:3

4. திரு. ராஜபாண்டியன் – திருமதி. ஸ்டெல்லா தம்பதியினர்

6. திரு. அகஸ்டின் – திருமதி. பிரீத்தி தம்பதியினர்

7. திரு. கிறிஸ்டியன் டேவிடார் – திருமதி. உஷா தம்பதியினர்

8. திரு. வேலன்டைன் டேவிடார் – திருமதி. ரீட்டா தம்பதியினர்

10. திரு. டேவிட் லிவிங்ஸ்டன் – திருமதி. அன்பு தம்பதியினர்

17. திரு. கிறிஸ்துதாஸ் ரீமஸ் – திருமதி. சந்திரிகா தம்பதியினர்

18. திரு. ஆனந்த் கோயில்பிள்ளை – திருமதி. நிஷா தம்பதியினர்

21. திரு. பிரகாஷ் – திருமதி. நந்தினி தம்பதியினர்



23. திரு. ஜெயராஜ் – திருமதி. லீனா தம்பதியினர்

திரு. ஜெரேமியா – திருமதி. கமலா தம்பதியினர்

24. திரு. வின்சென்ட் ஜெயராஜ் – திருமதி. ஜான்சி தம்பதியினர்

திரு. சாமுவேல் நோவா டேவிட் – திருமதி. வீனா தம்பதியினர்

25. திரு. டேவிட் ஞானராஜ் – திருமதி. ஜெபஸ்டா அஸ்லின்

26. திரு. தேவராஜ் ஜேக்கப் – திருமதி. ரூபி அன்னபூரணி தம்பதியினர்

திரு. ஜெயராஜ் – திருமதி. வஸ்த்தி தம்பதியினர்

திரு. ஜார்ஜ் பிரின்ஸ் – திருமதி. ஜாய்ஸ் தம்பதியினர்

திரு. ஆனந்த் ஸ்டான்லி – திருமதி. ராஜலஷ்மி தம்பதியினர்

திரு. ஜான் சரவணன் – திருமதி. பியுலா பொற்கொடி தம்பதியினர்

27. திரு. பிரான்சிஸ் – திருமதி. ஜாய்ஸ் மேரி தம்பதியினர்



திரு. மில்டன் ஜார்ஜ் – திருமதி. மேரி தம்பதியினர்

திரு. ஜாக்சன் – திருமதி. அமிர்தா தம்பதியினர்

திரு. சுரேஷ் – திருமதி. பிரின்சி தம்பதியினர்

29. திரு. அற்புதராஜ் – திருமதி. ஷீலா தம்பதியினர்

30. திரு. பெனடிக்ட் ஆபிரகாம் – திருமதி. நிறைமொழி தம்பதியினர்

31. திரு. ராஜா சாமுவேல் – திருமதி. ஜாய்ஸ் மரகதமேரி தம்பதியினர்



## கிளைச் சபைகள் : ஜனவரி 2026

"நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." ஆகாய் 2:19

### தங்கள் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணுவோர் :

வடமேல்பாக்கம் (பிறந்த நாள் )

01 திருமதி. கிரிசோலைட்
14 தனலட்சுமி
21 கிரேஸ் ஜெசிகா

(திருமண நாள் )

07 திரு. பிரேம்குமார் – திருமதி. மின்னலா சுகந்தி
26 திரு. சாலமன் – திருமதி. ஷீபா
27 திரு. கனகராஜ் – திருமதி. லீலாவதி

பனையூர் (பிறந்த நாள் )




13 குழந்தை. லிடியா
17 திருமதி. மோகனா

(திருமண நாள் )

25 திரு. எபிநேசர் துரைராஜ் – திருமதி. எஸ்தர்
27. திரு. மங்கள்ராஜ் – திருமதி. ஜெனிலா

பேரீஞ்சம்பாக்கம்

08 வானிஷா

சென்னாகுப்பம் (பிறந்த நாள் )

08 அப்புருவன் ஜார்ஜ்
10 எஸ்தர் எட்வர்ட் காலின்ஸ்
13 விஜய்
17 தீனதயாளன்
30 ஜீவிதா



## ஜனவரி மாதம் வேத வினா பகுதி

**1 நாளாகமம் 1 – 15**

1. யார் காலத்தில் பூமி பகுக்கப்பட்து ?
2. யார் வேண்டிக் கொண்டதை தேவன் அருளினார் ?
3. சணல்நூல் ஏபோத்தை தரித்திருந்து யார் ?
4. யாருக்கு கிலேயாத்தில் இருபத்து மூன்று ஊர்கள் இருந்தது ?
5. எதன் இரைச்சலைக் கேட்கும் போது யுத்தத்துக்குப் புறப்பட வேண்டும் ?
6. கர்வாலி மரத்தின் கீழ் அடக்கம் பண்ணப்பட்டது யார் யார் ?
7. கீதோனின் களத்தில் யாரை கர்த்தர் அடித்தார்? அதன் பெயர் என்ன ?
8. தாவீதை தன் இருதயத்தில் அவமதித்தது யார் ?
9. ஓபேத் ஏதோமின் வீட்டில் எத்தனை மாதம் இருந்து ?
10. யார் தங்கள் தோள்மேல் எதை எடுத்து வந்தார்கள் ?

## வேத வினா : சரியாகப் பொருத்துக.

(1 நாளாகமம் 1-15)

1. பெரியா X ஞான திருஷ்டிக்காரன்
2. தல்மாயின் குமாரத்தி X பேலா
3. அசரியா X பாடகன்
4. நாராயி X தீங்கு உண்டானது
5. யூதா X மாக்காள்
6. சீயோன் கோட்டை X சங்கத்தலைவன்
7. பென்யமின் X ஆயுததாரி
8. கெனானிய X தேவாலய விசாரனைக்காரன்
9. எமான் X மாக்காள்
10. சாமுவேல் X ராஜாதிபத்திரம் நடப்பித்தார்கள்

திருமதி. ராய் டேவிட்

**விடைகளை ஜனவரி 25-ம் தேதிக்குள் அனுப்பவும்**

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி :
**CSI** *கிறிஸ்து நாதர் ஆலயம்*
6/371, ஞானம்மாள் ரோடு, டேவிட் நகர், படப்பை - 601 301.

விடைகள் எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் பெயரைத் தமிழில் தெளிவாக எழுதவும்.



## டிசம்பர் மாத – வேத வினாப் போட்டி – சரியான விடைகள் :

| | | |
|---|---|---|
| 1. | 2 இராஜா.... 17 : 6, 18 : 11 | கோசான் நதி ஆலாகி, ஆபோர் மேதியர் பட்டணம் |
| 2. | 2 இராஜா.... 20 : 19 | சமாதானமும், உண்மையும் |
| 3. | 2 இராஜா....17 : 28 | பயந்து...............விதத்தை |
| 4. | 2 இராஜா.... 17 : 24 | பாபிலோன், சடத்தா, ஆபா, செப்பர் என்ற ஊரார்கள் |
| 5. | 2 இராஜா.... 22 : 8 | பிரதான ஆசாரியரான இல்க்கியா |
| 6. | 2 இராஜா.... 17 : 31 | செப்பர்வியா தங்கள பிள்ளைகளை அக்கியில் தகனித்தனர் |
| 7. | 2 இராஜா.... 24 : 4 | குற்றமில்லாத இரத்தத்தை நிரப்பினதற்காக |
| 8. | 2 இராஜா.... 18 : 28,31 | அசிரியா ராஜாவின் வார்த்தை |
| 9. | 2 சாமுவேல்.... 20 : 7 | எசேக்கியாவின் பிளவையின் மேல் பற்று போட்டான் |
| 10. | 2 இராஜா.... 19 : 30 | யூதா வம்பத்தாரில் தப்பி மீதியாயிருப்பவர்கள் |

**பெண்களுக்கான வேதவினாப் போட்டி**

**டிசம்பர் மாதம் சரியான விடைகள் அனுப்பியவர்களை வாழ்த்துகிறோம்.**

திருமதி. பானுமதி பால்ராஜ்
திருமதி. ஷைலா ரெபேக்கா
திருமதி. ஜாய் கென்னடி
திருமதி. ஆலிவ் எபன்
திருமதி. செல்வரூபி ஆண்ட்ரூஸ்
திருமதி. ஏஞ்சலின் மேஷாக்
திருமதி. வசந்தி மேஷாக்
திருமதி. வசந்தி டேவிட்
திருமதி. மல்லிகா ஸ்டான்லி
திருமதி. மஞ்சு ஆனந்தகுமார்
திருமதி. எஸ்தர் சாம்சுந்தர்
திருமதி. ஜெமிமா ஹாப்டே
திருமதி. பிரேமா கிறிஸ்டோபர்
திருமதி. ஜீவகனி
திருமதி. பொன்மதி தர்மராஜ்
திருமதி. எமீமாள் வேதநாயகம்
செல்வி. ஜாஸ்வின் சுபிட்சா
திருமதி. பிளைமினி கிறிஸ்டோபர்
திருமதி. அ. ஏஞ்சலின் ரூஃபஸ்
திருமதி. ஞானதீபம் கிறிஸ்டி
திருமதி. ஸ்டெல்லா மேஷாக்
திருமதி. ஸ்டெபினா ஸ்டீபன்
திருமதி. பெனிட்டா டேனிஸ்
திருமதி. தனபாக்கியம்
திருமதி. ஜான்சி
திருமதி. அமுதா அப்பாதுரை
திருமதி. டாரதி ஸ்டீபன்
திருமதி. கீதா கௌதமி
திருமதி. ரச்சனா அம்ப்ரோஸ்
திருமதி. மோ. புனிதவதி பால் வீரபாண்டியன்
திருமதி. எமிலி வில்லி ஜாய்ஸ்
திருமதி. குளோரி ஸ்டீபன்பால்
திருமதி. அபிகாயில் மனோரஞ்சிதம்
திருமதி. ரோஸ்வின் வத்சலா
திருமதி. நிருபா சார்லஸ்
திருமதி. த. புதுமை அந்தோணியம்மாள்
திருமதி. ஸ்வீனா பிரவீன்
திருமதி. மேரி கிருபாய்
திருமதி. கலா இம்மானுவேல்
திருமதி. ஜெயராணி விக்டர்
திருமதி. கமலா ஜெரேமியா
திருமதி. பெரில் பாஸ்கர்

## ஆண்களுக்கான குறுக்கெழுத்துப் போட்டி

*டிசம்பர் மாதம் சரியான விடைகள் அனுப்பியவர்களை வாழ்த்துகிறோம்.*

திரு. சுரேஷ்ராஜா
திரு. டேவிட் ராஜ்குமார்
திரு. பஞ்சம்
திரு. அனிஷ்குமார்
திரு. ஜெ. ஆனந்தகுமார்
திரு. ஆண்ட்ருஸ்
திரு. பால்ராஜ்
திரு. இம்மானுவேல் ஜோன்ஸ்
திரு. அகஸ்டின் ஜெயபால்
திரு. வின்சென்ட் ஜெயராஜ்
திரு. சாலமன் வில்லயிம் ஹாப்டே
திரு. டேனிஸ் பிரபாகர்
செல்வன். செல்வ பிரேம் ஒபதியா
திரு. அந்தோனி ஜேக்கப் ராஜா
திரு. சாலமோன் சந்திரபாபு
திரு. ஸ்டான்லி ராஜ்குமார்
திரு. செலின் ஜெயகரன்
திரு. மேஷாக்
திரு. கிருபைநாயகம்
திரு. தர்மராஜ்
திரு. சாம் மோசஸ்
திரு. டியூக் இம்மானுவேல்

## பெண்களுக்கான கிறிஸ்துமஸ் கட்டுரை போட்டி


*டிசம்பர் மாதம் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டவர்கள்*

ரத்னா ஆம்ரோஸ்
பிரேமா கிறிஸ்டோபர்
எமீமாள் வேதநாயகம்
ஜெமீமா ஹாப்டே
ஸ்டெல்லா மேஷாக்
ஜோஸ்லின் சுகந்தி
ஏஞ்சல்ஸ் மேஷாக்
பெனிட்டா டேனிஷ்
பொன்மதி தர்மராஜ்
செல்வரூபி ஆண்ட்ரூஸ்
எஸ்தர் சாம்சுந்தர்
புனிதவதி வீரபாண்டியன்
ரோஸ்லின் வட்சலா
டாரதி ஸ்டீபன்
ஜீவகனி
ஸ்வீனா பிரவின்
ஏஞ்சலின் ரூபஸ்
ஸ்டெபினா ஸ்டீபன்
வசந்தி
பெயர் குறிப்பிடாதவர்



## ஆண்களுக்கான குறுக்கு எழுத்துப்போட்டி
## ஜனவரி மாதம் – 2026

ரோமர் 1 - 6




**இடமிருந்து வலம் :**

1. சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவன் யார் ?
2. மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே இயேசு யாராயிருக்கிறார் ?
7. அவர்களுடைய ............................... கீழே பாம்பின் விஷம் இருக்கிறது ?
8. ..................... வழியே அவர்கள் அறியவில்லை
9. விசுவாசத்தினாலே எதை நிலைநிறுத்துகிறோம் ?

**மேலிருந்து கீழ் :**

3. விசுவாசத்தினாலே பிழைப்பவன் யார் ?
4. விசுவாசத்தினாலே உண்டாவது எது ?
5. குணப்படும்படி ஏவுகிறது எது ?
6. தேவனிடத்தில் ....................... இல்லை.
10. பாவத்திற்க்கென்று ..................... மரித்தார் ?

**விடைகளை ஜனவரி 25-ம் தேதிக்குள் அனுப்பவும்.**

## ஆண்களுக்கான டிசம்பர் மாத
## குறுக்கு எழுத்துப் போட்டிக்கான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 8↓ | | 4↓ | | | |
| | | | 1↓ | | நா | 6→ | இ | யே | சு | |
| | | 2→ | எ | ரு | ச | லே | ம் | | 10↓ | |
| | | | கி | | ரே | 9→ | மா | ம் | ச | ம் |
| | 7↓ | | ப் | | த் | | னு | | க | |
| 3→ | ஏ | ரோ | து | | து | | வே | | ரி | |
| | சா | | | | | | ல் | | யா | |
| 5→ | யா | க் | கோ | பு | | | | | | |

"நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்." மத்தேயு - 21:22

# ஜனவரி மாத உபவாசக் கூடுகை - 2026

**10.01.2026 சனிக்கிழமை**

காலை 10:00 மணிமுதல் 1:00 மணி வரை

இடம்: **CSI கிறிஸ்து நாதர் ஆலயம்**





**தலைமை :**

**Rev. Y. *தேவகுமார்,***

ஆயர்

**இறைச் செய்தி :**

***திரு. ஜோஸ்வா*** அவர்கள்

சிறப்புச் செய்தியாளர்

துதி ஆராதனை, சிறப்புப் பாடல்கள், சாட்சிகள், இறைச்செய்தி ஜெபவேளை

அனைவரும் ஒருமித்து ஜெபிக்க இது ஒரு நல்ல வாய்ப்பு!

***அனைவரும் பங்கேற்போம் !***

***(மதிய உணவு வழங்கப்படும்.)***



## டிசம்பர் மாதம் வண்ணம் தீட்டுதல் போட்டியில் பங்கேற்ற பிள்ளைகள்

ஏனோக் மேத்தியூஸ் - 2 வயது
ஷெர்ஷேன் - 2ஆம் வகுப்பு
அதிரியா - 3ஆம் வகுப்பு
எலிஜா மிரக்கிளின் - 2ஆம் வகுப்பு
மைக்கேல் ராஜா - 4 வயது
ஐடா ஏஞ்சலின் - 1ஆம் வகுப்பு
ஸ்டார் மீகா - 4ஆம் வகுப்பு
அதிரையன் - 3ஆம் வகுப்பு
ஜான் ஜெஃப்ரி - பிளே ஸ்கூல்
ஜெயனா - 3ஆம் வகுப்பு
ஷெரில் பிரெய்ஸி - 5ஆம் வகுப்பு
லிடியா மிராக்ளின் - 31/2வயது
காலேப் ஆரோன் - 6ஆம் வகுப்பு
டானிகா லீக் - ஃப்ரி கேஜி
ஹீவிந்த் - 1ஆம் வகுப்பு
பிளஸ்வின் - 5ஆம் வகுப்பு
இவான்தி - 5ஆம் வகுப்பு
ஃபீபி ஜொவனா - ஃப்ரி கேஜி
ஈதன் ஜெர்மயா - 4ஆம் வகுப்பு
மர்லியா பிளஸ்ஸி - 3ஆம் வகுப்பு
ஷைன் ஐசக் - 21/2 வயது
அபிஷா - 6ஆம் வகுப்பு
ஆதவன் - 1ஆம் வகுப்பு
பெனீமார்கஸ் - 1ஆம் வகுப்பு
ஷெர்லின் சான்ரா - 3ஆம் வகுப்பு
தவிஸ் டாவின் - 4ஆம் வகுப்பு
அன்புராஜன் - 4ஆம் வகுப்பு
அமன்டா - 3ஆம் வகுப்பு
ஜெரிக் நத்தாணியேல் - எல்.கே.ஜி
ஆதன் - 1ஆம் வகுப்பு
மிஸ்டி மார்ட்டீன் - 5ஆம் வகுப்பு
ரியானா அகெஸ்டி - 2ஆம் வகுப்பு

**ஆண்கள் ஐக்கிய சங்கம், படப்பை**



**ஜனவரி மாதம்**

**திருமறை ஆய்வு – Bible Study**

"உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி, என் கண்களைத் திறந்தருளும்." சங்கீதம் 119:18

திருமறை ஆய்வு

புதன்கிழமைகளில் மாலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை

| | | | |
|---|---|---|---|
| முதல் வாரம் | 07.01.2026 | - | **அருட்பணி. Y. தேவகுமார்** |
| இரண்டாம் வாரம் | 14.01.2026 | - | **திரு. அற்புதராஜ்** |
| மூன்றாம் வாரம் | 21.01.2026 | - | **திரு. பெனடிக்ட் ஆபிரகாம்** |
| நான்காம் வாரம் | 28.01.2026 | - | **திரு. லூக் ஜெயராஜ்** |

**ஆயர்**
**9840198476**

**திரு. பெனடிக்ட் ஆபிரகாம்**
**கன்வீனர்**
**9443011345**

CSI கிறிஸ்துநாதர் ஆலயம் – படப்பை குருசேகரம்

## குடும்ப ஜெபக்கூடுகை நடைபெறும் இல்லங்கள்

**நாள்: பிரதி வியாழன் நேரம் : மாலை 7.00 மணி**

### ஜனவரி – 2026

**22**

*அருட்பணி. Y. தேவகுமார்*
ஆயர் இல்லம்
CSI கிறிஸ்து நாதர் ஆலயம், ஞானம்மாள் சாலை ,
படப்பை
9840198476

**29**

*திரு. அற்புத ராஜ்*
நெ.16, நஷ்யா இல்லம்
ஸ்ரீ முருகாத்தம்மன் கோயில் தெரு,
பலராம் நகர் அருகில் கீழ்படப்பை
செல். 8879940661

*தொடர்புக்கு :*

ஆயர்
9840198476

திரு. டேனிஸ் பிரபாகர், கன்வீனர்
98418 51476

## MEMBERSHIP RENEWAL FORM :

அன்பான திருச்சபையோரே!

நமது ஆலயத்தில் அங்கத்தினர் **MEMBERSHIP RENEWAL FORM** விவரங்கள் புகைப்படத்துடன் கூடிய புதுப்பித்தல் பணிகள் நடைபெறுவதால் அதற்குரிய படிவத்தை திரு.சாம்மோசஸ் அவர்களிடம் பெற்று பூர்த்தி செய்து கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**ஆயர்**

திரு. சாம்மோசஸ் 9791059483

### கிராம நற்செய்தி ஊழியம்

**25.01.2026 நான்காம் ஞாயிற்றுக்கிழமை** மாலை 4.00 மணிக்கு நற்செய்தி ஊழியம் செய்ய ஆலயத்திலிருந்து வாகனம் புறப்படும். இதில் பங்குபெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.



### மூத்தோர் பகுதி

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, முதியவர்கள் ஒவ்வொருவருக்கும் என் அன்பான ஸ்தோத்திரங்களையும் புத்தாண்டு வாழ்த்துகளையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்! கடந்த ஆண்டு முழுவதும் கர்த்தர் நம்மைக் கண்மணிபோல் பாதுகாத்து, கிருபையால் வழிநடத்தினார். சரீரப் பாடுகள் மற்றும் பலவீனங்கள் இருந்தபோதிலும், ஜெபிக்கும் ஒவ்வொரு நேரத்திலும் ஆறுதலான வசனங்களைத் தந்து நம்மைத் தாங்கி நடத்தினார். இப் புதிய ஆண்டில், முதியவர்களாகிய நமக்கென கர்த்தர் அளித்துள்ள ஓர் அருமையான வாக்குத்தத்த வசனம்: “ அவர்கள் முதிர் வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள். ” ( சங்கீதம் 92 : 15 ) இந்த வசனம் நமக்கு நம்பிக்கையையும் தைரியத்தையும் அளிக்கிறது. முதியவர்களாகிய ஒவ்வொருவரையும் கர்த்தர் பசுமையுடனும் புஷ்டியுடனும் காத்து நடத்துகிறார். இதனை விசுவாசத்தோடு நம்பி, உறுதியுடன் அறிவிக்கலாம். முதியவர்கள் தங்களுடைய ஆரோக்கியத்தைப் பேணிக் காக்க சில அடிப்படை நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம்.முதலாவதாக, சரிவிகித உணவும் போதிய நீர்ச்சத்தும் உடல் வலிமைக்கு மிக முக்கியமானவை. குறிப்பாக எலும்புகளின் ஆரோக்கியத்திற்காக கால்சியம் மற்றும் வைட்டமின் சத்துக்கள் நிறைந்த உணவுகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, தினமும் குறைந்தது 20 முதல் 30 நிமிடங்கள் வரை நடைப்பயிற்சி செய்வது ரத்த ஓட்டத்தைச் சீராக்கி, மன அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது. மேலும், மருத்துவர் பரிந்துரைத்த மருந்துகளைச் சரியான நேரத்தில் உட்கொள்வதும், ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவுகளைத் தொடர்ந்து பரிசோதிப்பதும் அவசியம்.எல்லாவற்றிற்கும் மேலாக, போதிய தூக்கமும், குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நேரத்தைச் செலவிடுவதும் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு மிகுந்த பயனளிக்கும். கர்த்தாதி கர்த்தர்தாமே உங்களையும், உங்கள் ஜெபத்தின் மூலமாக உங்கள் குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே சமாதானத்தையும் நலனையும் தந்தருளுவாராக.ஆமென்

**திரு. நவராஜ் ரவீந்திரன்**
**கன்வீனர்**

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள் :

✠ நம் ஆயர் குடும்பம், சபை ஊழியர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரின் ஆரோக்கியத்திற்காக திருப்பணிகளுக்காக, திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், இறை சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காக

✠ நம் திருச்சபைகளைச் சேர்ந்த குடும்பங்கள் அனைவருக்காகவும், கிராமங்களில் நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்களுக்காக,

✠ திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,

✠ திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,

✠ நமது ஐக்கிய சங்கங்களின் திருப்பணிக்காக, பொறுப்பாளர்களுக்காக

✠ நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக

✠ தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர், பேராயரம்மா, ஆயர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக

✠ சாலமங்கலம் கிராம திருச்சபை ஆலயக் கட்டுமான பணிகள் விரைவில் முடிக்க


## நமது ஜெப மன்றாட்டுகள் :

✠ இந்தப் புதிய ஆண்டில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலன் ஆகிய தேவ கிருபைக்காக,

✠ நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர்காலத்துக்காக,

✠ புதிய அருட்பணித்தளங்களுக்காகவும், நமது குருசேகர கிராம ஊழியங்களில் இணைந்துள்ள விருகம்பாக்கம், சாலிகிராமம், பழவந்தாங்கள் சபைகளுக்காக ஜெபிப்போம்.





## சிறுவர் பகுதி <u>வண்ணம் தீட்டுதல்</u>

(10 வயதுக்கு உட்பட்ட சிறு பிள்ளைகள் மட்டும்)

**<u>மனப்பாட வசனம்</u>**

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகதிகமாய் விருத்தியடைந்தார். லூக்கா 2 : 52



திருமதி. ஜோஸ்லின் அனிஷ்குமார்

**பெயர் :**

**வகுப்பு :** **கையொப்பம் :**

**வண்ணம் தீட்டிய படத்தை ஜனவரி 25-ம் தேதிக்குள் ஆலயத்தில் சேர்க்கவும்**